## உங்களை, உங்கள் வீட்டை மற்றும் உங்கள் உடைமைகளை ஆராய்தல்

- நீங்கள் கைது செய்யப்பட்டால், காவல் துறையினருக்கு ஆராயும் உரிமை உண்டு:
  - உங்களையும் உங்கள் உடைமைகளையும்;
  - ஆதாரம் உள்ளதாக காவல்துறை நம்பும் எந்த இடமும் (எ.கா உங்கள் வீடு, வாகனம், கணினி, கைதொலைபேசி மற்றும் பல).
- பெண்களை மற்றொரு பெண் அதிகாரி சோதனை செய்வார் மற்றும் அவரின் கண்ணியம் கட்டாயமாக காக்கப்படும்.
- காவல்துறையினர் உங்கள் வீட்டிலோ அல்லது வேலை இடத்திலோ சோதனை நடத்த முடிவெடுத்தால், அங்கு ஆதாரம் என நம்பப்படும் பொருட்களைக் கண்டெடுத்தால் அதை பறிமுதல் செய்யலாம். நீதிமன்ற வழக்கிற்கு பிறகு பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களைப் மீண்டும் உங்களிடம் திரும்ப வழங்கலாமா என்பதை நீதிமன்றமே முடிவு செய்யும்.

## குற்ற வழக்குத் தொடர்வு

- நீங்கள் கைது செய்யப்பட்ட 48 மணிநேரத்திற்குள், காவல்துறையினர் உங்களை நீதிமன்றத்தில் நிறுத்தவோ அல்லது விடுதலையோ செய்ய வேண்டும், அது பிணையாகவும். அல்லது நிபந்தனையற்றும் இருக்கலாம்.
- நீங்கள் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டால், குற்றஞ்சாட்டு வழக்கறிஞர் உங்களை மேலும் 48 மணிநேரங்களுக்குத் தடுத்து வைக்க விண்ணப்பிக்கலாம். இருப்பினும், ஏன் காவல் துறையினர் 48 மணிநேரத்திற்கும் கூடுதலாக தடுத்து வைக்க கோருகிறார்கள் என்ற காரணத்தைக் குற்றஞ்சாட்டு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் அவசியம் சொல்ல வேண்டும். நீங்கள் இக்கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கலாம் மற்றும் ஏன் நீங்கள் 48 மணிநேரத்திற்கும் கூடுதலாக தடுத்து வைக்கப்படுகிறீர்கள் என்பதை நீதிமன்றம் விளக்க வேண்டுமென கோரலாம். நீங்கள் 48 மணிநேரத்திற்கும் கூடுதலாக தடுத்து வைக்கப்படலாமா அல்லது இல்லையா என்பதை நீதிமன்றமே முடிவெடுக்கும் .
- நீங்கள் நீதிமன்றத்தில் உங்கள் குடும்பத்தினரைத் தொடர்பு கொள்ளவும். மற்றும் உங்கள் வழக்கறிஞரிடம் பேசவோ சந்திக்கும் வாய்ப்பையோ மற்றும் வழக்கறிஞரை நியமிக்க அனுமதி கேட்கலாம்.
- குற்றப்புலனாய்வின் போது நீங்கள் மோசமாக நடத்தப்பட்டாலோ அல்லது மருத்துவரைச் சந்திக்க விரும்பினாலோ, அதை நீங்கள் உடனடியாக நீதிபதியிடம் தெரிவிக்க வேண்டும்.
- குற்றப்புலனாய்வின் போது நீங்கள் கையொப்பமிட்ட அறிக்கையில் உங்களுக்கு உடன்பாடில்லாவிட்டால், அல்லது காவல்துறையினர் காவல் நிலையத்தில் உங்களிடம் குற்றச்சாட்டு அல்லது தீர்ப்பு குறித்து ஏதாவது வாக்குறுதியோ வழங்கியிருந்தால், அதை நீங்கள் நீதிபதியிடம் உடனடியாக தெரிவித்து விட வேண்டும்.



## சட்ட உதவி

உங்களுக்கு மேல் விபரங்கள் தேவைப்பட்டாலோ அல்லது குற்றவாளி சட்ட உதவி திட்டம்(CLAS) கீழ் விண்ணப்பிக்க விரும்பினாலோ மற்றும் வழக்கறிஞரை நியமிக்க பணத்தட்டுபாடு இருந்தாலோ, நீங்கள் அல்லது உங்கள் குடும்பத்தினர் உங்கள் குற்ற அறிக்கையுடன் கடந்த 12 மாத சிபிஎஃப் (CPF) பங்களிப்பு அறிக்கையுடனும் இலவச சேவை அலுவலகத்திற்கு அழைக்கவோ அல்லது வருகையோ தரலாம்(தொடர்பு கொள்ளத் தேவையான தகவல்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன).

### பொறுப்புத் துறப்பு:

இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் ஜனவரி 2015 வரையிலான சட்டம் சம்பந்தமான பொதுவான மற்றும் அடிப்படை தகவல்கள் மட்டுமே.

இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சிங்கப்பூர் சட்டக் கழகம் பொதுசேவைக்காக வழங்கியவை ஆகும். இவை நம்பத்தகுந்த மற்றும் துல்லியமான மூலத்தில் இருந்து எடுக்கப்பட்டவை. இருப்பினும், இதில் இருக்கும் தவறுகள் அல்லது விடுபடுதல்களுக்கு கழகமோ அல்லது அதன் பிரதிநிதிகளோ பொறுப்பேற்க மாட்டார்கள். வாசகர்கள் சுதந்திரமான சட்ட ஆலோசனை பெற வேண்டும்.


**சிங்கப்பூர் சட்டக் கழகம்**
**இலவச சேவை அலுவலகம்**

மாநில நீதிமன்றங்கள் (State Courts)
Level 5
1 Havelock Square Singapore 059724
தொலைபேசி: 6534 1564
தொலைநகல்: 6534 5237
மின்னஞ்சல்: probonoservices@lawsoc.org.sg
**probono.lawsociety.org.sg**
அலுவலக நேரம்: திங்கள் - வெள்ளி, 9 காலை - 5.45 மாலை


*பதிப்புரிமை 2015*



THE LAW SOCIETY OF SINGAPORE

# குற்றப் புலனாய்வுகள்

# உங்கள் உரிமையை அறியுங்கள்




## அறிமுகம்

சிங்கப்பூரில் குற்றப் புலனாய்வுகளைக் காவல்துறை மற்றும் பல்வேறு சட்டச் செயலாகாக்க முகமைகளால் நடத்தப்படுகின்றன. காவல்துறை மற்றும் பல்வேறு சட்டச் செயலாக்க முகமைகள், எ.கா மத்திய போதைப்பொருள் தடுப்புப் பணியகம், ஊழல் ஒழிப்பு புலனாய்வு பணியகம் இன்னும் பல அமைப்புகளின் புலனாய்வுக்கு உதவ நீங்கள் கேட்டு கொள்ளப்பட்டால் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்ற வழிகாட்டியை இத்துண்டறிக்கை வழங்குகிறது. ("காவல்துறை").

## புலனாய்வுகள்

- காவல் துறையினருக்கு உங்களின் பெயர், வீட்டு முகவரி மற்றும் அடையாள அட்டை எண்களைக் கேட்கும் உரிமை உள்ளது. ஒரு குற்றத்தைப் புலனாய்வு செய்யும்பொழுது காவல் துறையினர் எவரிடமும் கேள்வி கேட்கலாம். காவல் துறையினருக்கு இத்தகவல்களை வழங்காவிட்டால் நீங்கள் கைது செய்யப்படலாம்.
- நீங்கள் கைது செய்யப்பட்டாலும் படாவிட்டாலும், காவல் துறையினர் உங்களை வாக்குமூலம் அளிக்க கோரலாம்.
- நீங்கள் வாக்குமூலம் அளிக்கும்பொழுது, நீங்கள் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பின்வருமாறு:
  - உங்கள் வாக்குமூலம் பொதுவாக ஆங்கிலத்தில் எழுதப்படும். உங்களுக்கு ஆங்கிலம் புரியவில்லை என்றால், நீங்கள் உடனடியாக காவல் துறையினரிடம் தெரிவிக்க வேண்டும். உங்களுக்கு புரியும் மொழியில் புலன் விசாரணை தொடர்ந்து நடத்தப்படும்.
  - நீங்கள் உண்மையை மட்டுமே கூற வேண்டும், இருப்பினும் நீங்கள் குற்றச்சாட்டுகளில் சிக்கும் வண்ணம் ஏதும் சொல்லத் தேவை இல்லை.
  - நீங்கள் குற்றமற்றவர் என்பதை நிரூபிக்கும் நிகழ்வுகள் மற்றும் தற்காப்பு வாதங்களை, நீங்கள் அவசியம் காவல் துறையினரிடம் தெரிவிப்பதோடு அவை உங்கள் வாக்குமூலத்தில் எழுதப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும். இல்லையேல், நீதிமன்றத்தில் இந்த தற்காப்பு வாதம் முதன் முதலாக எழுப்பப்படும் பொழுது, நீதிபதி அதை நம்ப மறுக்கக் கூடும்.
  - உங்கள் வாக்குமூலத்தை வழங்கியப் பிறகு, கையொப்பமிடும் முன் அதை கவனமாக படித்து வழக்கைப் பற்றி நீங்கள் காவல் துறையினரிடம் குறிப்பிட்டவை அனைத்து சரியாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
- வாக்குமூலத்தில் நீங்கள் கையொப்பமிடும் முன் அதில் எந்த பகுதியையாவது திருத்தவும் அழிக்கவும் உங்களுக்கு உரிமையுண்டு. நீங்கள் கைது செய்யப்பட்டாலோ அல்லது காவலில் தடுத்து வைக்கப்பட்டாலோ, நீங்கள் பின்வருவனவற்றைச் செய்யலாம்:
  - உங்கள் குடும்பத்தினர் அல்லது வழக்கறிஞரைத் தொடர்புக் கொண்டு நீங்கள் கைதானதைத் தொலைபேசியில் தெரிவிக்கக் விண்ணப்பிக்கலாம்.
  - உங்கள் குடும்பத்தினரை அல்லது வழிக்கறிஞரை வருகை அளிக்க விண்ணப்பிக்கலாம்.
  - உங்களுக்கு விருப்பமான வழக்கறிஞருடன் ஆலோசனை நடத்தக் விண்ணப்பிக்கலாம்.
  - இருப்பினும், தங்கள் புலனாய்வுக்குத் தடையாக உணரும் பட்சத்தில் காவல் துறையினர் இவ்விண்ணப்பத்தை மறுக்கலாம். உங்களின் ஒவ்வொரு கோரிக்கையையும் பதிவு செய்ய நீங்கள் கேட்கலாம்.
- நீங்கள் காவல் நிலையத்தில் இருக்கும் சமயம், நீங்கள்:
  - உணவு, குடிநீர் மற்றும் கழிப்பறை இடைவேளை ஆகியவற்றைக் விண்ணப்பிக்கலாம்.
  - உடல் நலமில்லாவிட்டால், உங்களை விசாரிக்கும் அதிகாரியிடம் புலனாய்வைத் தொடர இயலாதென்றோ அல்லது மருத்துவரைச் சந்திக்க விருப்பம் தெரிவிக்கலாம்; மற்றும்
  - உங்களின் ஒவ்வொரு கோரிக்கையையும் பதிவு செய்யக் கேட்கலாம்.
- நீங்கள் குற்றச்செயலுக்காக குற்றம் சாட்டப்பட்டால், "எச்சரிக்கை வாக்குமூலம்" எனப்படும் வாக்குமூலம் பதிவு செய்யப்படும்.
  - காவல்துறை அதிகாரி நீங்கள் எதற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ளீர்கள் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கும் எழுதப்பட்ட அறிக்கையை அவசியம் உங்களிடம் படித்துக் கட்ட வேண்டும்.
  - இந்த நேரத்தில் உங்களைத் தற்காக்கும் எவ்வித ஆதாரங்களை மற்றும் தரவுகளை நீங்கள் விரும்பினால் வழங்கலாம் என்ற எச்சரிக்கை உங்களுக்கு வழங்கப்படும், நீங்கள் அதை அப்போதே செய்யவேண்டும். இல்லையேல், நீதிமன்றத்தில் இந்த தரவு முதன் முறையாக எழுப்பபட்டால், நீதிபதி அதை நம்ப மறுக்கக் கூடும்.
  - நீங்கள் ஏதாவது கூற விரும்பினால், அவை எழுதப்பட்டு, உங்களுக்குப் புரியும் மொழியில் மீண்டும் வாசிக்கப்படும், பிறகு நீங்கள் அதில் கையொப்பமிடலாம்.
  - குற்றச்சாட்டு மற்றும் எச்சரிக்கை வாக்குமூலம் ஆகியவற்றின் ஒரு நகல் உங்களிடம் வழங்கப்படும்.

